தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 7, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 ஜூலை 23, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

கருத்துகளை ஒழுங்குபடுத்திச் சொல்ல வேண்டிய முறைப்படி இனிமையாகச் சொல்லக்கூடிய சிறந்த சொல்வன்மை செயல்மிக்கவர் கூறும் தொழிலை விரைவாகச் செய்ய உலகமே காத்துக் கொண்டிருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

225—

மின்மாற்றி

***36203—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கீழத்தூவல் கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதி, கீழத்தூவல் கிராமத்திற்கு 11 கே.வி. கீழத்தூவல் மின்பாதை வழியாக 4 மின்மாற்றிகள்மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. பெருகிவரும் மின்பளுவைக் கருத்திற்கொண்டு, கூடுதலாக 100 கே.வி.ஏ. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகள் கடந்த 10–10–2013 அன்றும், 24–1–2014 அன்றும் நிறுவப்பட்டுள்ளன. தற்போது, முதுகுளத்தூர் தொகுதி, கீழத்தூவல் கிராமத்திற்குச் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள கீழத்தூவல், மேலத்தூவல், சாம்பக்குளம் மற்றும் மகிண்டி பகுதிகளில் சுமார் 20 கிராமங்கள் உள்ளன. அங்கு வாழும் மக்கள் மழைக் காலங்களில் மிளகாய் பயிர், நெற் பயிர் செய்து வருகின்றனர். கோடைக்காலங்களில் பருத்தி வேலை செய்து வருகின்றனர். இங்கு விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரை ஆழ்துளைக் கிணறு மூலமாகப் பெறமுடிகிறது. அங்குள்ள மக்கள் விவசாயத்தையே முழுவதுமாக நம்பி வாழ்கின்றனர். குறைந்த மின்னழுத்தம் காரணமாக, மின்சாரம் இருந்தும் விவசாய பம்புசெட்டுகளை இயக்க முடியாத நிலை உள்ளது. எனவே, கீழத்தூவல், மேலத்தூவல், சாம்பக்குளம் மற்றும் மகிண்டி ஆகிய பகுதிகளில் உள்ள பழைய மின் மாற்றிகளை மாற்றி, கூடுதலாக 100 கே.வி.ஏ. மின்மாற்றிகளை அந்தப் பகுதிகளில் நிறுவி தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

2014 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கோட்டம், முதுகுளத்தூர் உபகோட்டத்தில் உள்ள முதுகுளத்தூர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ள கீழத்தூவல் கிராமத்திற்கு 11 கே.வி. கீழத்தூவல் மின்பாதை வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அங்கே மின்பற்றாக்குறை இருந்தது உண்மைதான். அதனால்தான் 100 கே.வி.ஏ. திறன்கொண்ட இரண்டு மின்மாற்றிகள் நிறுவப்பட்டு, அதன்மூலமாக, மின்பளு சுமை சரிசெய்யப்பட்டிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் அந்தப் பகுதியில் வீட்டு மின் இணைப்புகள் 600. அவற்றினுடைய மின்பளு 290 கே.வி; வணிக மின் இணைப்புகள் 12. அவற்றினுடைய மின்பளு 42 கே.வி; விவசாய மின் இணைப்புகள் 41. அதற்கு 102 கே.வி மின்பளு தேவைப்படுகிறது. 7 மேல்நிலை குடிநீர் தொட்டிகளுக்குத் தேவைப்படும் மின்பளு 15 கே.வி. ஆக மொத்தம் 660 எண்ணிக்கைக் கொண்ட மின் இணைப்புகளுக்கு 440 கே.வி. மின்பளு உச்சபட்சத் தேவையாக இருக்கிறது. அந்தப் பகுதிகளில் அதிகபட்சத் தேவையாக 449 கே.வி. மின்பளுதான் தேவைப்படுகிறது. ஆனால், இன்றைக்கு அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளின் மின்திறன் ஏறத்தாழ 642 கே.வி. அளவிற்கு இருக்கின்றது.*

முற்பகல் 10—05

ஏற்கெனவே நான்கு மின்மாற்றிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அந்த நான்கு மின்மாற்றிகளுடன், பற்றாக்குறையைப் போக்க இப்பொழுது 100 கே.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 6 மின்மாற்றிகளின் மூலமாக—மொத்தம் 642 கிலோ வாட் மின்பளுவிற்கு அங்கே வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், தேவையோ 449 கிலோ வாட்தான். ஆகவே, தற்பொழுது தேவைப்படும் மின்பளுவின் தேவையைக்காட்டிலும் அதிகமாகவே அங்கே மின் மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மீண்டும் அந்தப் பகுதிகளிலே ஆய்வு செய்து, தற்பொழுது மின் பளு அதிகரித்து இருக்கிறதா என்பதனைக் கருத்திலே கொண்டு—இதற்கு பின்பும், இந்தப் பகுதிகளிலே

கூடுதலாக மின் பளு அதிகரித்திருக்கிறது என்று கண்டறியப்பட்டால்— மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைபோல் புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டு, அந்தப் பகுதிகளில் தடையில்லா மின்சாரம் கடந்த 3 மாதங்களாக வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு ஆவன செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***4995—திரு. பழ. கருப்பையா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறைமுகம் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) துறைமுகம் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்கும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*